மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

வாலாஜாபேட்டை நகராட்சி

நகரமன்ற சாதாரணக் கூட்டம்

வாலாஜாபேட்டை நகராட்சியில் 2020-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31-ந் தேதி திங்கள்கிழமை ம்மாலை 04.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.ப.சதீஷ்குமார்,பி.பார்ம்., அவர்கள்

தனி அலுவலர்

மன்றப் பொருள்கள்

| | |
|---|---|
| 1 | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னனை-28 அவர்களின் செயல்முறை உத்திரவு கடித ந.க.எண்:3336/J2/2020-16 நாள்:23.04.2020-ல் கோரோனா வைரஸ் (COVID-19) முன்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி சுகாதாரப்பிரிவின் மூலம் (DISINFECTION) கிருமீகள் நீக்கம் செய்வதற்கும் பிளிசிங் பவுடர் 3000 கிலோ வாங்கி வழங்கிட இந்நகராட்சி களப்பணியாளர் மற்றும் துப்புரவு அலுவலர் கோரியுள்ளார்கள். மேற்படி பிளிச்சிங் பவுடர் வாங்கி வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>வ.எண் \| பொருள்/விவரம் \| எண்ணிக்கை/அளவு<br>1. \| பிளிச்சிங் பவுடர் \| 3000(Kgs)<br><br>அலுவலகக்குறிப்பு:<br>1)மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2)2020-21-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3)பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்க மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>தீர்மானம் எண்:46, நாள்:31.08.2020.<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 2 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.72/2019/சி1, நாள்.26.08.2019ல் Online Grievance Redressal System-யை செயல்படுத்த UTIS, ULB's Ward Boundary Map Shape file format (.Shp); Open sources மென் பொருள் மூலம் உருவாக்கி அனுப்பி வைத்திட கேட்டுக் கொள்ளப்பபட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவீனத் தொகை ரு.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.<br>மேலும் பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக ஒப்பந்தப்பள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்பபடுகின்றது.<br>அலுவலகக்குறிப்பு:-<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) 2020-21 ஆம் ஆண்டு பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:-1442/2019/எப்1<br><br>தீர்மானம் எண்:47, நாள்:31.08.2020.<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 3 | மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.அ2/0735/2017, நாள்.09.01.2018-ல் இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் தொகை ரூ.5.50 இலட்சம் மதீப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06ல் ஏகாம்பரநாதர் கோயில் குளக்கரை மழைநீர்வடிகால்வாய் மற்றும் கல்வெர்ட் அமைக்கும் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வரப்பெற்றதை தொடர்ந்து மேற்கண்ட பணியினை மேற்கொள்ள 30.01.2018-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஸ்ரீ சாரதி பில்டர்ஸ், நகராட்சி ஒப்பந்ததாரர், வாலாஜாபேட்டை அவர்களுக்கு பணிவுத்திரவு வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் பணியினை தொடங்கியபோது அப்பகுதியில் உள்ள பொது மக்கள் மேற்கண்ட பணியினை செய்யவிடாமல் தடுத்து நிறுத்தியதுடன் சட்டமன்ற உறுப்பினரிடம் இப்பகுதியில் இப்பணியினை மேற்கொள்ள வேண்டாம் என தெரிவிக்கப்பட்டது. மேலும் சட்டமன்ற உறுப்பினரின் அறிவுரைப்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, பல்லி வெங்கடாசலபதி தெருவில் மழைநீர்வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதீப்பீடுகள் தயார் செய்து வழங்கப்பட்டது.<br>மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராணிப்பேட்டை அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.அ2/0735/2017, நாள்.18.08.2020-ல் இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் தொகை ரூ.5.50 இலட்சம் மதீப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06ல் ஏகாம்பரநாதர் கோயில் குளக்கரை மழைநீர்வடிகால்வாய் மற்றும் கல்வெர்ட் அமைக்கும் பணியினை ரத்து செய்தும் மற்றும் இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் தொகை ரூ.5.50 இலட்சம் மதீப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, பல்லி வெங்கடாசலபதி தெருவில் மழைநீர்வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு திருத்திய நிர்வாக அனுமதி அளித்து செயல்முறை உத்திரவு வரப்பெற்றுள்ளது. இக்கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டி வைக்கப்படுகின்றது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 ஆம் ஆண்டு திட்டத்தில் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியினை ரத்து செய்தும், புதியதாக திருத்திய நிர்வாக அனுமதி அளித்துள்ள பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 ஆம் ஆண்டு நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:-0892/2020/இ1.<br><br>**தீர்மானம் எண்:48, நாள்:31.08.2020.**<br>**அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.** |

//உண்மை நகல்//

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.